தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம்

செய்தி வெளியீட்டு எண்: 98/2026 நாள்:17.08.2026

செய்திக்குறிப்பு

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தின் அறிவிக்கை எண்: 11/2025, நாள் 15.07.2025 இன் வாயிலாக ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு -II (தொகுதி II & IIA) பணிகளில் அடங்கிய வனவர் மற்றும் கள உதவியாளர் ஆகிய பதவிகளுக்கான உடற்தகுதித்தேர்வு மற்றும் நடைச்சோதனை 24.08.2026 மற்றும் 25.08.2026 ஆகிய தேதிகளில் நடைபெற உள்ளது. இத்தகவலானது மேற்கண்ட பதவிகளுக்கு தகுதியான விண்ணப்பதாரர்களுக்கு மட்டும் குறுஞ்செய்தி மற்றும் மின்னஞ்சல் மூலமாக அனுப்பப்பட்டுள்ளது. எனவே, அவ்விண்ணப்பதாரர்கள் அனைவரும் தேர்வாணைய இணையதளத்தில் உள்ள குறிப்பாணையை பதிவிறக்கம் செய்து மேற்குறிப்பிட்ட நாட்களில் குறிப்பிட்ட இடத்தில் உடற்தகுதித் தேர்வு மற்றும் நடைச்சோதனையில் கலந்து கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

திரு. பானோத் ம்ருகேந்தர் லால், இ.ஆ.ப.,
செயலாளர்